சிவமயம்



ஈழத்துச் சிதம்பரம்

## காரைநகர் திண்ணபுரம் சிவன் கோவில்

## பங்குனி மகோற்சவம்

# கொடியேற்றத் திருவிழா

சுருதிகட்கும் எட்டாத சுந்தரேசா போற்றி போற்றி
வருமொழிலார் சௌந்தராம்பிகையாரே போற்றி போற்றி
பெருகருள் சேர் பாம்பொடும் புலியும் தாம் கண்டிடவே
பரவுசீர் ஈழத்துச் சிதம்பரத்தாய் போற்றி போற்றி.

(ஆண்டிகேணி ஐயனார் புராணம்)

ஆண்டு தொறு மீனமனை யுத்தரமுன் னொன்பா நாள்
வேண்டு கொடியேற்ற விழாக் கால் கொண்டு விளங்கிடுமால்
மாண்டகு சீருத்திரத்தின் மாதீர்த்தந் தான்றிகழும்
பூண்டமணம் பதனொன்றித் புவியோங்க நேர்ந்திடுமே.

(ஈழத்துச் சிதம்பர புராணம்)

**சிவநேயச் செல்வர்களே!**

நிகழும் ஏவிளம்பி வருடம் பங்குனி மாதம் 07ஆம் நாள் 21-03-2018 புதன் கிழமை காலை 7.00 மணியளவில் பூரணை பொற்கலை சமேத அரிகர புத்திரருக்கும் சௌந்தராம்பிகா சமேத சுந்தரேஸ்வரப் பெருமானுக்கும் அபிஷேகம் நடைபெற்றுப் பகல் 10.00 மணிளவில் கொடியேற்றம் நடைபெறும். அதனைத் தொடர்ந்து இடப வாகனத்தில் சௌந்தராம்பிகா சமேத சுந்தரேஸ்வரப் பெருமான் பரிவார மூர்த்திகளோடு வீதி உலா வருவார். இரவு நிகழ்ச்சியாக விசேட மேளக்கச்சேரிகளுடன் இடப வாகனத்தில் எம்பெருமான் 8.00 மணியளவில் வீதி உலாவரும் காட்சியும் இடம்பெறும். அன்று பகல் மாணிக்கவாசகர் மடாலயத்தில் அன்னதானம் நடைபெறும். உங்களுடைய நிதி உதவியினைக் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பி உதவுமாறும், திருவிழாவில் கலந்து எம்பெருமானின் இஷ்டசித்திகளைப் பெற்றுய்யுமாறும் கேட்டுக்கொள்கின்றோம். அடியார்கள் அபிஷேகத்திற்குரிய பால், தயிர், இளநீர் ஆகியவற்றைத் தேவஸ்தானத்தில் ஒப்படைக்கவும்.

**பணம் அனுப்பவேண்டிய முகவரி**

ஆ. அமபலவிமுருகன்
மு. சுந்தரலிங்கம்
ஆதீனகர்த்தாக்கள்

வே. சிவகுருநாதன்
சடையாளி,
காரைநகர், இலங்கை

***இங்ஙனம்***
**1ஆம் திருவிழா உபயகாரர்**

*சுபம்*